# மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 மாசித் திங்கள் 01–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண். 23/2020–இல்**
**வழக்கிடை விண்ணப்ப எண் 04/2026**

**01. R. சத்யா**
**02.R. மைதிலி** ...**மனுதாரர்கள்/வாதிகள்**

**–எதிர்–**

**01. அலமேலு**
**02. ஜெயக்கொடி**
**03. செல்லம்மாள்**
**04. பிரபு**
**05. ராஜ்குமார்**
**06. கோபி** ...**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனுவில் மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.S.பெருமாள்** அவர்கள் தோன்றினார். எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.A.பிரபுராம்** அவர்கள் தோன்றினார். இந்த மனு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது இரு தரப்பினரும் முன்வைத்த வாதங்களை கவனத்தில் வைத்தும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையிலிருந்த இந்த மனுவில் இன்று இந் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

## ஆணையுரை

### முகவுரை

கூடுதல் ஆவணங்களை தாக்கல்செய்ய அனுமதி வழங்கக் கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 07-ஆம் வகுமுறையின் 14-ஆம் விதியின்கீழ் இந்த மனு தாக்கல்செய்யப் பட்டுள்ளது.

III rd ADJ Court, Salem

## மனுவின் சுருக்கம்

01. மனுதாரர் முதலேற்பு வழக்கு எண் 79/2022, முதலேற்பு வழக்கு எண் 551/2023 ஆகிய இரு வழக்குகளில் பிரதிவாதி ஆவார். முதலேற்பு வழக்கு எண்கள் 79/2022, 551/2023, 23/2020 ஆகியன ஒரே விசாரணை -யில் நடத்தப்படுகின்றன. மூன்று வழக்கிற்காக முதலேற்பு வழக்கு எண் 23/2020 இல் சான்றுகள் பதிவுசெய்யப்படுகின்றன. இந் நிலையில் வாதி தரப்பு 03-ஆம் சான்றாளராக முதலேற்பு வழக்கு எண்.23/2020 வழக்கில் மனுதாரர் சாட்சியமளிக்க வேண்டும். இந்த மனுவுடன் தாக்கல்செய்யப் பட்டுள்ள ஆவணங்களை தற்போது முன்னிடுவதற்கு மனுதாரருக்கு அனுமதி வழங்க வேண்டும். ஆவணங்கள் யாவும் இந்த வழக்கை முடிவுசெய்ய அவசியமானவை. ஆகையால், இந்த மனுவை அனுமதிக்க வேண்டும்.

## எதிருரையின் சுருக்கம்

02. வழக்கு நடவடிக்கையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் மனுதாரர் இந்த மனுவைத் தாக்கல்செய்துள்ளார். வாதி தரப்பு 01-ஆம் சான்றாளர் சாட்சியம் அளித்தபோதே இந்த ஆவணங்களை தாக்கல் செய்யாமல் தற்போது தாக்கல்செய்வது ஏற்புடையதல்ல. ஆகையால், இந்த மனுவைத் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

03. **இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

III rd ADJ Court, Salem

**தீர்முடிவு**

04. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. மனுவில் சொல்லப்பட்டுள்ள 3 வழக்குகளின் ஒரே விசாரணை சம்மந்தமான சங்கதிகள் சரியானவை. முதலேற்பு வழக்கு எண் 23/2020 வழக்கில் இந்த மனுதாரர் வாதி தரப்பு சான்றாளராக மொத்த வழக்குகளுக்காகவும் சாட்சியம் அளிப்பது பொருத்தமாக இருக்கும். தற்போது மனுவில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்கள் யாவும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களாகவும் வருவாய் துறை ஆவணங்களாகவும் உள்ளன. அவை சம்மந்தமான சங்கதிகள் அவர் தாக்கல்செய்துள்ள வாதுரையில் உள்ளது. இந்த ஆவணங்களை தற்போது தாக்கல்செய்ய அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித அநீதியும் விளையாது. ஆகையால், இந்தமனுவை அனுமதிப்பது உகந்தது என்று இந் நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதிமுடிவு**

05. இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V Date: 2026.02.13 17:56:40 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**

**சேலம்.**

III rd ADJ Court, Salem

## மனுதாரர்கள் தரப்பு ஆவணங்கள்

01. 20.04.1969-ஆம் தேதியிடப்பட்ட விற்பனைஆவணம் - பதிவு நகல்
02. 04.10.1972-ஆம் தேதியிடப்பட்ட விற்பனை ஆவணம் - பதிவு நகல்
03. 09.09.1980-ஆம் தேதியிடப்பட்ட விற்பனை ஆவணம் - பதிவு நகல்
04. 11.06.1982-ஆம் தேதியிடப்பட்ட விற்பனை ஆவணம் - பதிவு நகல்
05. 11.06.1982-ஆம் தேதியிடப்பட்ட பரிவர்த்தனை ஆவணம்- பதிவு நகல்
06. 09.05.2022-ஆம் தேதியிடப்பட்ட 1431-ஆம் ஆண்டு பசலி அடங்கல் கணக்கு - உண்மை நகல்
07. 07.03.2025-ஆம் தேதியிடப்பட்ட 1432-ஆம் ஆண்டு பசலி அடங்கல் கணக்கு - உண்மை நகல்
08. 27.11.2025-ஆம் தேதியிடப்பட்ட 1433-ஆம் ஆண்டு பசலி அடங்கல் கணக்கு - உண்மை நகல்
09. 27.11.2025-ஆம் தேதியிடப்பட்ட 1434-ஆம் ஆண்டு பசலி அடங்கல் கணக்கு - உண்மை நகல்
10. 27.11.2025-ஆம் தேதியிடப்பட்ட 1435-ஆம் ஆண்டு பசலி அடங்கல் கணக்கு - உண்மை நகல்
11. வாதிகள் பெயரிலுள்ள மின் கட்டண அட்டை - அசல்
12. லட்சுமணன் பெயரிலுள்ள மின் கட்டண இரசீதுகள் (3 வரிசைகள்) - அசல்

III rd ADJ Court, Salem